

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு - குறள்







நேரு நினைவுக் கல்லூரி (தன்னாட்சி)
புத்தனாம்பட்டி - 621 007. திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
Ph: 04327-234638, Fax : 04327 -234811
E-mail : info@nmc.ac.in Web: www.nmc.ac.in


Aruna, Trichy. Ph: 0431-2704733

# நேரு நினைவுக் கல்லூரி (தன்னாட்சி)

தேசிய தர மதிப்பீட்டுக் குழுமத்தால் "A" தரச் சான்றிதழ் பெற்றது

(திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)

புத்தனாம்பட்டி-621 007. திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

## நாட்குறிப்பு : 2017-2018



சுயநிதிப்பிரிவு



Chemistry Lab



Computer Lab



Bio-Tech Lab



C.V.R. Dining Table

# நேரு நினைவுக் கல்லூரி (தன்னாட்சி)

தேசிய தர மதிப்பீட்டுக் குழுமத்தால் "A" தரச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)

புத்தனாம்பட்டி – 621 007. திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

## நாட்குறிப்பு 2017 - 2018

(சுயநிதிப் பிரிவு)

## ( பொன் விழா ஆண்டு )

Name ______________________________

Roll / Reg. No. ______________________ Class ______________

______________ For College : ______________

Phone : **04327 - 234638**
Fax : **04327 - 234811**

E-mail : **info@nmc.ac.in**
Website : **www.nmc.ac.in**

## பொருளடக்கம்


| வ. எண். | விபரங்கள் | பக்கம் | வ. எண். | விபரங்கள் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 1. | தேசிய ஒருமைப்பாட்டு உறுதி மொழி | 1 | 9. | தேர்வு நெறியாளர் அலுவலகம் | 20 |
| 2. | கல்லூரி வாழ்த்து, தேசிய கீதம் | 2 | 10. | மாணவர்களுக்கான விடுதிகள் | 23 |
| 3. | கல்லூரி வரலாறு | 3 | 11. | மாணவர்களுக்கான பிற அமைப்புகள் | 23 |
| 4. | கல்லூரி மேலாண்மைக்குழு | 4 | 12. | தர உத்திரவாத உள்ளமைப்பு | 24 |
| 5. | கல்லூரி நிர்வாகக் குழு | 5 | 13. | தேர்வுகள் அட்டவணை | 25 |
| 6. | மாணவர்களுக்கான பொது விதிமுறைகள் | 6 | 14. | தேர்வுசார் குற்றங்களும் தண்டனைகளும் | 26 |
| 7. | கல்லூரியின் விதிகள் | 9 | 15. | நாட்காட்டி | 28 |
| 8. | கல்வி உதவித் தொகைகள் | 18 | | | |

## I. தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

''நாட்டின் உரிமையும் வாழ்வையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன் என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்."

"ஒரு போதும் வன்முறையை நாடேன் என்றும் சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியில் அரசியல் அமைப்பின் வழி நின்று தீர்வு காண்பேன் என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்."

## தமிழ்த்தாய் வாழ்த்து

*நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்*
*சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்*
*தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்*
*தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே*
*அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற*
*எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கே !*
*உன் சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து*
*வாழ்த்துதுமே ! வாழ்த்துதுமே ! வாழ்த்துதுமே !*

"மனோன்மணீயம்" பெ. சுந்தரம்பிள்ளை

## II. கல்லூரி வாழ்த்து

இராகம், ஹித்தோளம் * ஆதி தாளம்

1. நீரும் நிலமும் உள்ளளவும்
நெஞ்சில் நேர்மை உள்ளளவும்
நேரு நினைவுக் கல்லூரி
நிலவுக நிலவும் கதிராம் போல்.

2. புத்தனாம்பட்டி மூக்கப்பிள்ளை - நம்
பொன்னித்தாயின் மூத்தபிள்ளை
நேரு நினைவுக் கல்லூரி - அவர்
நெஞ்சில் சுரந்த காவேரி.

3. திரை கடலோடியும் திரவியம் தேடி - தந்
தேகம் அடைந்த பலனைப் பெற்று
நிறை குடமாக்கும் கல்விக்கே - தன்
நிதியை நீராய்ப் பாய்ச்சி விட்டார்.

4. வாழ்க அவர்தம் தொண்டு பல
வாழ்க அவர் புகழ் நீள் புவியில்
வாழ்க நேரு நினைவுக் கல்லூரி
வென்று புலமை சிறந்திடவே (நீரும்)

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே !



## III. கல்லூரி வரலாறு

புத்தனாம்பட்டி நேரு நினைவுக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஒரு முதல்நிலைக் கல்லூரியாகும். தன்னலமற்ற மறைந்த திரு. எம். மூக்கப்பிள்ளை அவர்கள் இக்கல்லூரியைத் தோற்றுவித்தவர் ஆவார். 1942 ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஸ்ரீ சண்முகநாதன் துவக்கப்பள்ளியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்ற அவரின் பெரும் முயற்சியில் ஓர் உயர்நிலைப் பள்ளியும், ஒரு கல்லூரியும் உருவாகியது மட்டுமல்லாமல் விரைவான முன்னேற்றத்தையும் அடைந்தது.

இக்கல்லூரி நகரச் சந்தடியிலிருந்து விலகி அமைதியான கிராமச் சூழ்நிலையில் அமைந்திருக்கிறது. மறைந்த முன்னாள் முதல்வர் சி.என். அண்ணாதுரை, எம்.ஏ., அவர்களால் 1967 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாள் தொடங்கி வைக்கப் பெற்றது என்பது மிகவும் பெருமைக்குரியது.

முக்கியமாக இக்கல்லூரி இவ்வட்டார மக்களின் மேற்படிப்புக்காக அமைந்திருந்தாலும், கல்லூரிப் படிப்பில் ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

2004 - 05 ஆம் கல்வியாண்டு முதல் இக்கல்லூரி பல்கலைக்கழக மானியக் குழுவினரால் தன்னாட்சிக் கல்லூரியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

2012 - 2013ம் கல்வியாண்டில் இக்கல்லூரிக்கு தேசிய தர மதிப்பீட்டுக் குழுமத்தால் (NAAC) "A" தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

## IV. கல்லூரி மேலாண்மைக் குழு

நேரு நினைவுக் கல்லூரி மேலாண்மைக்குழு, சங்கங்கள் பதிவுச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அமைப்பு ஆகும். இக்குழு, கல்வி முகமை (Educational Agency) மூலம் கல்லூரியை நிர்வாகம் செய்கிறது. கல்வி முகமையில் கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

**தலைவர்**

**திரு. மூ. பொன்னம்பலம், M.A., M.Sc.,**

**செயலர்**

**திரு. பொன். பாலசுப்ரமணியன் B.E.,**

**செயற்குழு உறுப்பினர்கள்**

திருமதி. **பொன். சிவனேஸ்வரி**

திரு. **அரு. லோகநாதன், B.Com.,**

திரு. **பொன். இரவிச்சந்திரன், M.Com.,**

திருமதி. **தேன்மொழி தங்கராஜா, B.A.,**



## V. கல்லூரி நிர்வாகக் குழு

1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்காற்றுச் சட்டத்தின் கீழ் கல்லூரியின் அன்றாட அலுவல்களை நிர்வகிக்க கல்லூரி நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**தலைவர்**

**திரு. பொன். பாலசுப்ரமணியன், B.E.,**

**செயலர்**

**திரு. பொன். இரவிச்சந்திரன், M.Com.,**

**உறுப்பினர்கள்**

திரு. **மூ. பொன்னம்பலம், M.A., M.Sc.,**

திருமதி. **பொன். சிவனேஸ்வரி,** கல்வி முகமையின் பிரதிநிதி.

திரு. **அரு. லோகநாதன், B.Com.,** கல்வி முகமையின் பிரதிநிதி.

திருமதி. **தேன்மொழி தங்கராஜா, B.A.,** கல்வி முகமையின் பிரதிநிதி.

முனைவர். **அ.ரா. பொன். பெரியசாமி, M.Sc., (App. Phy.) PGDCA., M.Sc., (CS) M.C.A., M.Phil., Ph.D.,** கல்லூரி முதல்வர்

முனைவர். **A. லீமாரோஸ், M.Sc., M.Phil., Ph.D.,** பல்கலைக் கழகப் பிரதிநிதி.

முனைவர். **S. குமாரராமன், M.Sc.,M.Phil.,Ph.D.,** ஆசிரியப் பிரதிநிதி.

திரு. **K. நாகராஜன், M.Sc., M.Phil.,** ஆசிரியப் பிரதிநிதி.

திரு. **T.P. ஆனந்தன், B.Com.,** அலுவலகக் கண்காணிப்பாளர்.

## VI. மாணவ / மாணவியர்களுக்கான பொது விதிமுறைகள்

1. ஒவ்வொரு மாணவரும் தூய்மையான, பண்பாட்டிற்குக் குறைவு ஏற்படுத்தாத ஆடைகளை அணிந்து வரவேண்டும்.
2. கல்லூரி வளாகத்திலும் கல்லூரிக்கு வெளியிலும் ஆசிரியர்களிடம் மாணவர்கள் பண்போடும், பணிவோடும் நடந்து கொள்ள வேண்டும்.
3. கல்லூரிப் பணியாளர்கள், அலுவலர்கள் ஆகியோரிடம் பண்போடு நடந்து கொள்ள வேண்டும்.
4. **கல்லூரி வளாகத்தினுள் இருக்கும் போது கல்லூரி அடையாள அட்டையை அனைத்து மாணவ/ மாணவியரும் அவசியம் அணிந்திருக்க வேண்டும். அவ்வாறு அணிந்திராவிட்டால் அம்மாணவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.**
5. கல்லூரியில் பயிலும் மாணவியர்களைக் கேலி செய்தல், அவர்களைத் தொடர்ந்து சென்று தொல்லை கொடுத்தல், அவமானப்படுத்தும் வகையில் நடந்து கொள்ளுதல் ஆகியவை கடுமையான குற்றங்களாகக் கருதப்பெற்றுக் கடுமையான தண்டனை வழங்கப்படும்.
6. **முதலாமாண்டு மாணவர்களைக் கேலி வதை (Ragging) செய்வது சட்டப்படி குற்றம். அவ்வாறு செய்யும் மாணவர்கள் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.**
6. முதல் மணி அடித்தவுடன் மாணவர்கள் உரிய வகுப்பறைக்குள் சென்று அமர வேண்டும். வகுப்பறைக்குள் செல்லாமல் நடமாடிக் கொண்டிருக்கும் அல்லது கூட்டமாகக் குழுமி நின்று கொண்டிருக்கும் மாணவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
7. கல்லூரி வளாகத்தில் அமைதியாக நடந்து கொண்டு அமைதியைப் பராமரிப்பது மாணவர்களின் கடமையாகும்.
8. ஆசிரியர் வகுப்பறையில் நுழையும்போது மாணவர்கள் அனைவரும் அமைதியாக எழுந்து மரியாதை செலுத்த வேண்டும். அவர் கூறியபின் இருக்கையில் அமரவேண்டும்.
9. இரண்டு நிமிடம் தாமதமாக வரும் மாணவர்கள் உரிய ஆசிரியரின் இசைவுபெற்று உள்ளே நுழைய வேண்டும். 2 நிமிடத்திற்கு மேல் 10 நிமிடத்திற்குள் தாமதமாக வரும் மாணவர்கள் தகுந்த காரணங்களின் அடிப்படையில் முதல்வரிடம்



அனுமதிச்சீட்டுப் பெற்று உரிய ஆசிரியரிடம் சமர்ப்பித்து உள்ளே செல்ல வேண்டும்.

10. வகுப்பு நடந்து கொண்டிருக்கும்போது ஆசிரியரின் அனுமதியின்றி எந்த மாணவரும் வகுப்பை விட்டு வெளியில் செல்லக்கூடாது.
11. ஒரு வகுப்பறையிலிருந்து மற்ற வகுப்பறைக்கு அமைதியாக மாறிச் செல்லவேண்டும்.
12. ஒரு வகுப்பு முடிந்து அடுத்த வகுப்பிற்கான ஆசிரியர் வரும் வரை மாணவர்கள் வகுப்பறையில் அமைதியாக இருக்கவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் வகுப்பறையை விட்டு வெளியே வந்து நிற்கக் கூடாது. அவ்வாறன்றி, வகுப்பறையை விட்டு வெளியே சென்றுவிட்டு அடுத்த வகுப்பிற்குக் காலதாமதமாக வரும் மாணவர்கள் வகுப்பறைக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
13. மாணவர்கள் எந்தக் காரணத்திற்காகவும் கல்லூரி அலுவலகத்திற்குள் நுழைய அனுமதி கிடையாது.
14. கல்லூரிக்குச் சொந்தமான கட்டிடங்கள், மரத்தினாலான பொருட்கள், மின்சாதனங்கள் முதலியவற்றிற்குச் சேதத்தை ஏற்படுத்தும் மாணவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். சேதமடைந்த பொருட்கள் சேதம் விளைவித்த மாணவரின் செலவிலேயே புதுப்பிக்கப்படும். சேதப்படுத்திய மாணவர்களைக் கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலையில் மதிப்புக்குரிய தொகையும் உரிய அபராதமும் அனைத்து மாணவர்களிடமிருந்தும் வசூலிக்கப்படும்.
15. கல்லூரி நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் எந்த மாணவரும் தாழ்வாரத்தில் நடமாடக்கூடாது.
16. மாணவர்கள் கல்லூரித் தகவல்பலகையில் உள்ள செய்திகளைத் தினமும் படித்து அறிந்துக் கொள்ள வேண்டும். தகவல் பலகையில் அறிவிக்கப்பட்ட செய்திகளை அறியாததால் மாணவர்களுக்கு ஏற்படும் இழப்புகளுக்குக் கல்லூரி முதல்வரோ, அலுவலகமோ பொறுப்பேற்க முடியாது.
17. கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் நடத்தும் கூட்டங்கள், விழாக்களுக்குக் குறைந்தது ஒருவார காலத்திற்கு முன்பே எழுத்து மூலம் முதல்வரிடம் அனுமதி பெறவேண்டும். அனுமதி பெற்ற கூட்டங்கள் அனுமதி பெற்ற காலத்தில் நடத்தப்படவில்லையென்றால், அது குறித்த விவரமும் உடனடியாக முதல்வருக்கு எழுத்து

மூலம் தெரிவிக்கப்பட வேண்டும். கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுமானால், அதற்குரிய சூழ்நிலைகளை எழுத்து மூலம் விளக்கி முதல்வரிடம் மறு அனுமதி பெற வேண்டும். கல்லூரி முதல்வரிடம் எழுத்து மூலம் அனுமதி பெறாமல், எவ்வித கூட்டமும் கல்லூரி வளாகத்தில் நடைபெறக் கூடாது.

18. மாணவர்களால் நடத்தப்படும் கூட்டங்கள், விழாக்கள் முதல்வர் மற்றும் ஆசிரியர்களின் முன்னிலை யிலேயே நிகழ்த்தப்பெற வேண்டும். ஆசிரியர்கள் முன்னிலை வகிக்காத கூட்டங்களுக்கோ, விழாக்களுக்கோ கண்டிப்பாக அனுமதி அளிக்கப்பட மாட்டாது. இவ்விதியை மீறுவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, கடுமையான தண்டனை வழங்கப்படும்.

19. மாணவர்கள் தங்கள் குறைகளை, பிரச்சனைகளை மாலை 2.00 மணிக்குமேல் முதல்வரைச் சந்தித்துத் தெரிவிக்கலாம். முன்னறிவிப்பின்றியும் எழுத்து மூலம் தெரிவித்து உரிய கால அவகாசம் அளிக்காமலும் வகுப்புகளைப் புறக்கணித்தல், பிற மாணவர்களை வகுப்புகளைப் புறக்கணிக்கத் தூண்டுதல், வேலை நிறுத்தத்தில் ஈடுபடுதல், பிற மாணவர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தூண்டுதல் குற்றமாகும். மேற்கண்ட செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படும்.

20. மாணவர்களின் நடத்தை கல்லூரி வளாகத்திலும், கல்லூரிக்கு வெளியிலும் திருப்திகரமாக இல்லா விட்டால், அத்தகைய நன்னடத்தை இல்லாத மாணவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படும்.

21. சாதி, மத அரசியல் தொடர்பான செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். மேற்கண்ட செயல்களில் ஈடுபடும் மாணவர்களின் கல்வி உதவித் தொகை மற்றும் கட்டணச் சலுகைகள் விலக்கிக் கொள்ளப்படும்.

22. முதல்வரின் அனுமதியின்றிக் கல்லூரி வளாகத்தில் சுற்றறிக்கைகள் விடுவதோ விளம்பரங்கள் செய்வதோ கூடாது. மேற்கண்ட செயல்களில் ஈடுபடுவோர் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.



23. முதல்வரின் அனுமதியில்லாமல் கல்லூரி வளாகத்தில் நன்கொடைகள் வசூலிக்கக்கூடாது.

24. கல்லூரி வளாகத்தைத் தூய்மையாக வைத்திருப்பது மாணவர்களின் கடமையாகும். மேற்கண்ட விதிமுறைகளை மீறுவோர்மீது நடவடிக்கை எடுப்பதற்கு முதல்வருக்கு அதிகாரம் உண்டு. தமிழ்நாடு அரசு கல்வி விதிகளின்படி குற்றம் செய்வோருக்கு அபராதம் விதிக்கவோ, இடமாற்றம் செய்யவோ அல்லது வருகைச் சான்றிதழை (Attendance Certificate) நிறுத்தி வைக்கவோ, தேர்வு எழுதுவதற்கு அனுமதி மறுக்கவோ, தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகக் கல்லூரியிலிருந்து நீக்கவோ முதல்வருக்கு முழு அதிகாரம் உண்டு.

25. கல்லூரி வளாகத்திற்குள் மாணவ, மாணவிகள் அலைபேசி (CELL PHONE) பயன்படுத்தத் தடை செய்யப்பட்டுள்ளது. மீறி வைத்திருந்தால் பறிமுதல் செய்வதோடு நடவடிக்கையும் எடுக்கப்படும்.

## VII. கல்லூரியின் விதிகள்

கல்வியாண்டு இரண்டு பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற்பருவம், கோடை விடுமுறைகளுக்குப் பிறகு கல்லூரி திறக்கப்பெற்ற நாள் முதல் குறைந்தது "90 வேலை நாட்கள்" வரை நடைபெறும். இரண்டாவது பருவம், முதற்பருவ விடுமுறைக்குப் பின் கல்லூரி திறக்கப்பெற்ற நாள் முதல் குறைந்தது "90 கல்லூரி வேலை நாட்கள்" முடியும் வரை நடைபெறும்.

படிப்புக் கட்டணம் ஒவ்வொரு பருவத் தொடக்கத்திலும் கல்லூரி அட்டவணையில் குறிப்பிடப்படும் தேதி அல்லது அதற்கு முன்பாகவோ செலுத்தப்படவேண்டும். மாணவர்கள் குறிப்பிட்ட தேதியில் கட்டணத்தைச் செலுத்தத் தவறினால் வேலை நாட்களுக்கு ரூபாய் ஒன்று வீதம் அபராதத்துடன் செலுத்த வேண்டும். அபராதத்துடன் செலுத்துவதற்குரிய கடைசித் தேதியிலும் செலுத்தத் தவறிவிட்டால்

அவர்களுடைய பெயர் வருகைப் பதிவேட்டில் இருந்து நீக்கப்படும். மறுமுறை கல்லூரியில் சேர வேண்டுமானால் கல்வித்தொகை, அபராதத்தொகை இவற்றுடன் மறுசேர்க்கைக் கட்டணமாக ரூபாய் நூறும் சேர்த்துச் செலுத்த வேண்டும்.

கட்டணங்களை கல்லூரி அலுவலகத்தில் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 வரை எல்லா வேலை நாட்களிலும் செலுத்தலாம். கட்டணம் செலுத்தும்போது மாணவர்கள் வரிசையில் நின்றுதான் செலுத்த வேண்டும். பணம் செலுத்தியதற்கான வரவுச்சீட்டை மாணவர்கள் பெற்றுப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும்.

தேர்வுக்கட்டணம் பொதுவாக, தேர்வுமுடிவுகள் வெளிவந்த 15 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். இதற்கான அறிவிப்பு கல்லூரி தகவல் பலகையில் அறிவிக்கப்படும். குறிப்பிடப்பட்ட தேதிக்கு முன்பாகவே தேர்வுக் கட்டணங்களைச் செலுத்துதல் நலம். காலம் தாழ்த்தித் தேர்வுக் கட்டணம் செலுத்தும் மாணவர்களின் விண்ணப்பங்களையும், தேர்வுக் கட்டணம் செலுத்தாத மாணவர்களின் விண்ணப்பங்களையும் தேர்விற்கு சேர்த்து கொள்ள முடியாது.

## வருகைப் பதிவு விதிமுறைகள்

1. கல்லூரி பொதுவாக வாரத்திற்கு 5 நாட்கள் நடைபெறும். ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணி முதல் நண்பகல் 3.30 மணி வரையிலும், 5 பாட வேளைகளாகச் செயல்படும்.

2. ஒவ்வொரு பாடவேளையிலும் மாணவர்களின் வருகை பதிவு செய்யப்படும். வருகைப்பதிவு செய்யப்படும் பொழுது வகுப்பில் இல்லாத மாணவர்கள் வகுப்பிற்கு வராதவர்களாகவே குறிக்கப்படுவர்.

3. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாடவேளையிலும் வருகை குறிக்கப்படும். ஐந்து பாடவேளைகளுக்கும் வருகை தந்திருந்தால் மட்டுமே ஒருநாள் வருகைப்பதிவாகக் கணக்கில் கொள்ளப்படும். முதல் மூன்று பாடவேளைகளில் ஏதேனும் ஒன்றிற்கு வராவிட்டாலும், அவ்வாறே கடைசி இருபாட வேளைகளிலும் ஒன்றிற்கு வராவிட்டாலும் அரைநாள் வராததாகக் கருதப்படும். மேற்கண்ட விதிமுறை ஐந்து பாட வேளைகளும் முழுமையாக நடக்கும் நாட்களுக்கு மட்டுமே பொருந்தும்.



4. வகுப்புகள் நடைபெறவில்லையெனில் (Cancellation of Class) நடைபெறாத வகுப்புகளினுடைய விவரத்தைத் துறைத் தலைவர் தகுந்த காரணங்களுடன் முதல்வருக்குத் தெரிவிப்பார். அக்காரணங்களின் அடிப்படையில் நடைபெறாத வகுப்புகளுக்கு மாணவர்களுக்குரிய வருகைப்பதிவு, முந்தைய மணியின் அடிப்படையிலோ அல்லது பிந்தைய மணியின் அடிப்படையிலோ வழங்கப்படும். துறைத்தலைவர்கள் தெரிவிக்காத நிலையில், மாணவர்கள் அனைவரும் வகுப்பிற்கு வராததாகவே கணக்கில் கொண்டு அந்த மணிக்கு வருகைப்பதிவு மாணவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

5. கல்லூரிக்கு வரத்தவறிய மாணவர்கள் பட்டியலில், தவறுதலாகத் தம் பதிவு எண் இருப்பதைக் காணும் மாணவர்கள் தாமதமில்லாமல் முதல்வரிடம் எழுத்து மூலம் தெரிவித்து வருகைப்பதிவைச் சரி செய்து கொள்ள வேண்டும். கல்லூரி விழாக்கள், விடுதிப்பணிகள், நாட்டு நலப்பணித்திட்டம், தேசியமாணவர்படை மற்றும் கல்லூரி அலுவல்கள் தொடர்பாக வகுப்பிற்கு வர இயலாமல் வருகைப்பதிவு இழந்த மாணவர்கள் உரிய ஆசிரியரின் கையொப்பத்துடன் ஒரு வாரத்திற்குள் முதல்வரிடம் விண்ணப்பித்து வருகைப்பதிவு பெற வேண்டும். **ஒரு வாரத்திற்குப் பின்வரும் வருகைப் பதிவு பெறுதல் குறித்த எத்தகைய விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.** அயற்பணிகளில் செல்லும் நாட்களின் எண்ணிக்கை பத்து நாட்களுக்கு மேல் அதிகமாகும் பொழுது முதல்வரின் முன் அனுமதி பெற வேண்டும். இதில் பின்னேற்பு எதுவும் வழங்கப்படமாட்டாது.

6. தொடர்ந்து பதினைந்து நாட்கள் தகுந்த காரணங்கள் இல்லாமல் கல்லூரிக்கு வரத்தவறிய மாணவர்களின் பெயர்கள் கல்லூரிப் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும்.

7. ஒவ்வொரு பருவத்திலும் 90 சதவீதம் வருகைப் பதிவு பெறாத மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகைகள், படிப்புக் கட்டணச் சலுகைகள் விலக்கிக் கொள்ளப்படும். **75 சதவீதம் வருகைப்பதிவு பெறாத மாணவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

## கல்லூரி தேர்வு விதிமுறைகள்

ஒவ்வொரு பருவத்திலும் மூன்று அகமதிப்பீட்டுத் தேர்வுகளும் (CIA) மற்றும் ஒரு மாதிரித் தேர்வும் (Rehearsal Exam) நடத்தப்படும்.

## விடுப்பு விதிமுறைகள்

1. மாணவர் எவரும் விடுப்பு முன் அனுமதி பெறாமல் கல்லூரிக்கு வராமல் இருத்தல் கூடாது. எல்லா விடுப்பு விண்ணப்பங்களும் பெற்றோர், பாதுகாவலர் கையொப்பமிட்டுச் சம்மந்தப்பட்ட துறை விரிவுரையாளரால் பரிந்துரைக்கப்பட வேண்டும்.

2. கல்லூரி விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்களின் விடுப்பு விண்ணப்பங்கள் உரிய விடுதிக் காப்பாளரால் பரிந்துரைக்கப்பட வேண்டும்.

3. சரியான நேரத்தில் தகுந்த காரணத்துடன் விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு விடுப்பு அனுமதி கொடுக்கப்படும். உடல்நலக் குறைவு மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக 3 நாட்களுக்கு அதிகமாக விடுப்பு தேவைப்பட்டால், மருத்துவச் சான்றிதழ் அல்லது தேவையான மற்ற சான்றிதழ்களை மாணவர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

4. விடுப்பு எடுக்கும் மாணவர்கள் அதற்கான விண்ணப்பத்தை முன்னதாக துறைத்தலைவரிடம் செலுத்தி விடுப்பு அனுமதியை உறுதி செய்து கொள்ளவேண்டும்.

5. உடல் நலக்குறைவின் காரணமாக 3 நாட்களுக்கு மேல் கல்லூரிக்கு வரத்தவறிய மாணவர்கள் எழுத்து மூலம் முதல்வருக்குத் தெரிவிக்கவேண்டும். மேலும் விடுப்பு விண்ணப்பத்தை, அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரால் கொடுக்கப்பட்ட சான்றிதழுடன் கல்லூரிக்கு வரும் நாளன்று சமர்ப்பிக்கவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் இவ்விதியை எவரும் மீறக்கூடாது.

6. அனுமதி பெறாமல் விடுப்பு எடுத்த மாணவர்கள் துறைத்தலைவரிடம் அனுமதி பெற்ற பிறகு தான் வகுப்பிற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.



7. உடல் நலக்குறைவு காரணமாகவோ அல்லது தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாகவோ 75 சதவீதத்திற்குக் குறைந்த வருகைப்பதிவு பெற்ற மாணவர்களைக் கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி முதல்வர் மன்னிப்பளித்து தேர்வெழுத அனுமதிக்கலாம்.

(அ) மாணவர்களின் வருகைப்பதிவு ஒரு பருவத்தில் 54 நாட்களுக்கு மேல் 68 நாட்களுக்குள் இருக்குமானால் முதல்வரின் மன்னிப்புக்கோரி உரிய சான்றிதழ்களோடு விண்ணப்பித்து, உரிய கட்டணத்தையும் செலுத்தி முதல்வரின் அனுமதிபெற்று மாணவர்கள் தேர்வெழுதலாம்.

(ஆ) வருகைப்பதிவு குறைந்த மாணவர்களுக்கு மன்னிப்பு (Condonation) அளிப்பது முதல்வரின் உரிமையாகும். மாணவர்களின் நன்னடத்தை, அவர்களால் குறிப்பிடப்பெறும் காரணங்கள் ஆகியவற்றில் திருப்தி அடைந்தால் மட்டுமே மேற்கண்டவாறு மன்னிப்பளித்து பரிந்துரை செய்து தேர்வெழுத முதல்வர் அனுமதிப்பார். முதல்வரின் மன்னிப்புப் பெறுவதோ அல்லது பரிந்துரை பெறுவதோ மாணவர்கள் உரிமையல்ல.

(இ) 60 சதவீதத்திற்கும் குறைவாக வருகைப்பதிவு பெறும் மாணவர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் பருவத்தேர்வுகள் எழுத அனுமதிக்கப் படமாட்டார்கள்.

## சுற்றுலா விதிமுறைகள்

(அ) சுற்றுலாக்கள் ஆசிரியர்களால் திட்டமிடப் பட்டு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(ஆ) அச்சுற்றலாவுக்கு ஏற்பாடு செய்யும் ஆசிரியர்களே முழுப்பொறுப்பும் வகிக்க வேண்டும்.

(இ) சுற்றுலாக்கள் மாணவர்களுக்குத் தனியாகவும் / மாணவியர்களுக்குத் தனியாகவும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(ஈ) பெற்றோர்களின் அனுமதி பெற்ற மாணவியர்களுக்கு மட்டுமே சுற்றுலாவில் பங்கு கொள்ள அனுமதி அளிக்கப்படும்.

(உ) எந்தவிதக் காரணத்தை முன்னிட்டும் எத்தகைய சூழ்நிலையிலும் மாணவ, மாணவியர் இணைந்து செல்லும் கல்விச் சுற்றுலாக்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

## உடற்பயிற்சிக் கல்வி

முதலாமாண்டு இளநிலை மாணவர்கள் கல்லூரியில் அங்கீகரிக்கப்பட்ட உடற்பயிற்சிக் கல்வியைப் பெற வேண்டும். மாணவர் வழக்கமான கல்வித் தகுதிகளுக்கு மேலாக உடற்பயிற்சிக்கான கல்வியை 75% வருகையுடன் பெற்றிருக்கிறார் என்று முதல்வர் சான்றிதழ் வழங்கவில்லை என்றால் அதுவரை வருடாந்திர வருகை முன்னேற்றச் சான்றிதழ் பூர்த்தியானதாகக் கருதப்படமாட்டாது. மேற்படி சான்றிதழ் வழங்கப்படுவதில் கீழ்க்காணும் மாற்று ஏற்பாடுகளும் சேர்ந்தவை.

(1) வெளி ஓட்டம் அல்லது விளையாட்டு (2) முறையான உடற்பயிற்சி. இந்த மாற்று ஏற்பாடு (1) ம் (2) ம் குறைந்தது 45 நிமிடம் நீடிக்கக்கூடிய வாரத்திற்கு இரண்டு வகுப்புகளுக்குக் குறையாமல் தொடரப்பட்டிருக்க வேண்டும்.

கல்லூரியில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ அதிகாரியால் உடற்கல்விக்குத் தகுதியில்லை என்று சான்று அளிக்கப் பட்டாலொழிய எந்த மாணவரும் உடற்பயிற்சிக் கல்வியிலிருந்து விலக்கு பெறமுடியாது.

## நூலகப் படிப்பறை விதிகள்

1. கல்லூரி வேலை நாட்களில் நூலகம் காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை திறந்திருக்கும்.

2. நூலகம் சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்களில் மூடப்பட்டிருக்கும்.

3. கோடை விடுமுறை நாட்களில் அறிவித்த நேரங்கள் மட்டுமே திறந்திருக்கும்.

4. ஒரே சமயத்தில் இரண்டு புத்தகங்களுக்கு மேல் ஒருவருக்கு வழங்கப்படமாட்டாது.

5. புத்தகங்களை நூலகத்திலிருந்து பெறுவதற்கு உரிய விண்ணப்பங்கள் நூலகரிடமிருந்து காலை 9.00 மணிக்குள் பெற்றுச் சமர்ப்பிக்கலாம். ஆனால் புத்தகங்கள் மதியம் 1.30 மணிக்குப் பிறகு தான் கிடைக்கும். புத்தகங்களைக் காலை 8.30 மணியிலிருந்து 9.30 மணிக்குள் திரும்பக் கொடுக்கலாம். புத்தகங்கள் வகுப்புகளுக்கு வழங்கும் கால அட்டவணை மற்ற அறிவிப்புகள் நூலகத் தகவல் பலகையில் தேவைப்படும்போது நூலகரால் அறிவிக்கப்படும்.



6. கல்லூரியில் சேர்ந்த உடன் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் நூலக அட்டை வழங்கப்படும். இந்த அட்டைக்கு மாறாக வழங்கப்படும் புத்தகங்களையும் செலுத்தவேண்டிய அபராதத் தொகை ஏதாவது இருந்தால் அதையும் செலுத்திய பின் நூலக அட்டையும் அதனுடன் விண்ணப்பங்களும் முறையாக மாணவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். எதுவரையில் நூலக அட்டை நூலகத்தில் இருக்கிறதோ அதுவரை மாணவர்கள் அவர்கள் வாங்கும் புத்தகங்களுக்குப் பொறுப்பு ஆவார்கள். நூலக அட்டை காணாமல் போனால் உடனே எழுத்து மூலம் நூலகத்திற்குத் தெரிவிக்க வேண்டும். ஒரு நூலக அட்டைக்கு ரூ. 5.00 வீதம் அலுவலகத்தில் செலுத்தி மாற்று அட்டையைப் பெறலாம். மாணவர்கள் அந்த அட்டையைக் கல்வி ஆண்டு இறுதியில் அதாவது பிப்ரவரி 28-ம் தேதிக்கு முன்பு நூலகரிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

7. எந்த மாணவருக்கும் புத்தகம் பெற்ற நாளில் இருந்து 14 நாட்களுக்கு அதிகமாக புத்தகங்களைத் தன்னிடம் வைத்துக்கொள்ள உரிமையில்லை. அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு மேலாக புத்தகங்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு நாளுக்கும், விடுமுறை நாட்கள் உட்பட நாள் ஒன்றுக்கு ரூ. 1/- வீதம் அபராதம் விதிக்கப்படும். புத்தகங்களைத் திருப்பிக் கொடுக்கக் காலந்தாழ்த்திவிட்ட மாணவர்கள் அபராதத்தொகையை அலுவலகத்தில் செலுத்தி அபராத இரசீதுடன் நூலகரிடம் கொடுக்க வேண்டும். அதுவரை மாணவர்கள் நூலகத்தில் சலுகை பெறமுடியாது.

8. நூலகப் புத்தகங்களைத் தன்பெயரில் எடுத்து மற்றவர்களுக்கு இரவலாகக் கொடுக்கக்கூடாது.

9. புத்தகங்கள் பெறும்போது மாணவர்கள் நன்றாகப் பரிசோதித்துப் பார்த்து வாங்கவேண்டும். ஏதாவது குறை இருந்தால் புத்தகம் வழங்கும் எழுத்தரிடம் முறையிட வேண்டும். அப்படிச் செய்யத்தவறினால் பிறகு அக்குறை கண்டுபிடிக்கப்பட்டால் அம்மாணவர்களே அந்தக் குறைக்குப் பொறுப்பாவார்கள்.

10. புத்தகங்களை அதனுடன் கூடிய சீட்டுடன் உள்ள விபரங்களான வகுப்பு, பதிவு எண், மாணவர் பெயர், புத்தக எண்ணுடன் திருப்பித்தர வேண்டும்.

11. புத்தகம் காணாமல் போனால் அல்லது சேதம் ஏற்பட்டால் அதை வாங்கிய மாணவர் புதுப் புத்தகத்தை வாங்கி நூலகத்திற்குத் தரவேண்டும்.

12. புத்தகங்களிலும், பத்திரிக்கைகளிலும் எந்த விதமான அடிகோடிட்டுக் காட்டவோ, அதன்மேல் எழுதவோ கூடாது. புத்தகங்களைக் கிழிக்கவோ சேதப்படுத்தவோ கூடாது.

13. புத்தகச் சீட்டுகளைக் கிழிக்கவோ அல்லது சிதைக்கவோ கூடாது. எந்தவித பாதிப்போ மண்கறையோ புத்தகச் சீட்டுகளுக்கு ஏற்பட்டால் ரூபாய் ஒன்று அபராதம் விதிக்கப்படும்.

14. நூலகர் பட்டியல் தயாரிக்கப்படும் பொருட்டு அல்லது வேறு சில காரணங்களுக்காகப் புத்தகங்களை எந்த நேரத்திலும் காலவரையறை முடியும் முன் திருப்பிக் கேட்கலாம்.

15. நூலகர் சில சமயங்களில் குறிப்பிட்ட புத்தகங்களைக் குறிப்புப் புத்தகங்களாக ஒதுக்கலாம். அடையாள அட்டைக்குப் பதிலாக வாங்கும் புத்தகம் அல்லது பத்திரிக்கைகளை நூலகத்திற்கு வெளியே எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

16. பத்திரிக்கைகளை அதற்கான மேசைகளில் இருந்து எடுக்கக்கூடாது. நூலகத்தின் உள்ளே படிக்க அனுமதி உண்டு. பத்திரிக்கைகளை கத்தரிக்கவோ வேறு ஏதாவது நூலகச் சொத்துக்கு கெடுதல் விளைவிக்கவோ கூடாது.

17. அபராதம் உட்பட அனைத்து கட்டணங்களையும் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான இரசீதை நூலகரிடம் காட்டி நூலக அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம்.

18. நூலகத்தில் கண்டிப்பாக அமைதியைக் கடைபிடிக்க வேண்டும். அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர்கள் நூலகரால் வெளியேற்றப் படுவார்கள்.

19. தமிழ், ஆங்கிலப் புதினங்கள், கதைகள் விடுமுறை காலங்களில் மட்டும் விநியோகிக்கப்படும்.



## அடையாள அட்டை

1. ஒவ்வொரு மாணவருக்கும் கல்லூரியில் சேரும்போது அம்மாணவரின் புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படும் போது அதில் உள்ள விபரங்களைச் சரிபார்த்து, தவறுகள் ஏதும் இருந்தால் உடனடியாக அலுவலகத்தில் தெரிவிக்க வேண்டும்.

2. அடையாள அட்டையைக் கல்லூரி, பல்கலைக் கழகத்தால் நடத்தப்பெறும் அனைத்துத் தேர்வுகள் எழுதும்பொழுதும், நூலகத்திலிருந்து நூல்களைப் பெறும் பொழுதும் கண்டிப்பாகக் கொண்டு வரவேண்டும். பணவிடை போன்ற அஞ்சல் துறை தொடர்பானவற்றிற்கும், கல்வி உதவிப்பணம் பெறும்பொழுதும் மாணவரை உறுதிப்படுத்த அடையாள அட்டை இன்றியமையாததாகும். அடையாள அட்டை இல்லாதவர்கள் நூலகத்தில் நூல்களைப் பெறுவதற்கும் தேர்வு எழுதுவதற்கும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

3. அடையாள அட்டையை இழந்துவிட்ட மாணவர்கள், முதல்வருக்கு எழுத்து மூலம் தெரிவித்து, கல்லூரி அலுவலகத்தில் ரூ.100/- செலுத்தி மாற்று அடையாள அட்டை பெறவேண்டும். அடையாள அட்டை இல்லாதவர்கள் கல்லூரிக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

## கல்லூரிச் சான்றிதழ்கள்

1. சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்கள் பதிவு எண், கல்வி பெற்ற காலத்துடன் வரவேண்டும். அஞ்சல் மூலம் அனுப்பப்படவேண்டும் என்றால் சுயவிலாசம் எழுதப்பட்ட அஞ்சல் உறையுடன் விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

2. பொதுவாக 3 நாட்கள் முன்னதாகவே விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

3. தேர்ச்சி பெற்றதற்கான அல்லது தகுதி பெற்றதற்கான சான்றிதழ்கள் பல்கலைக் கழகத்திலிருந்து மட்டுமே பெறவேண்டும்.

## சான்றிதழ்கள் கட்டணம்

1. கல்லூரியை விட்டு விலகிச் செல்லும் மாணவர்கள் மாற்றுச் சான்றிதழ் பெற ரூபாய் 100/- கட்டணம் செலுத்த வேண்டும்.
2. நன்னடத்தைச் சான்றிதழ் பெற ரூபாய் 10/-
3. வயதுச் சான்றிதழ் பெற ரூபாய் 10/-
4. மாற்றுச் சான்றிதழ் பெற ரூபாய் 10/-
5. சான்றிதழ் பிரதிகள் பெற ஒவ்வொரு பிரதிக்கும் ரூபாய் 10/-
6. உறுதிமொழிச் சான்றிதழ் பெற ரூபாய் 10/- கல்லூரியிலிருந்து விலகி 3 ஆண்டிற்குப் பிறகு விண்ணப்பித்தால் கூடுதல் கட்டணமாக ரூபாய் 10/- செலுத்த வேண்டும்.

## VIII. கல்வி உதவித் தொகைகள்

1. மத்திய அரசுக் கல்வி உதவித்தொகை இந்து தாழ்த்தப் பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. முழுக்கல்வி உதவித்தொகை பெற அவர்களுடைய பெற்றோர்கள், பாதுகாவலர்கள் ஆண்டு வருமானம் ரூ. 50,000/-க்குள் இருக்க வேண்டும்.

2. கிறித்துவ மதம் மாறிய தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் மாணவர்கள் மாநில அரசின் உதவித்தொகை பெறத் தகுதியுள்ளவர்கள். அவர்கள் பெற்றோர், பாதுகாவலர்கள் ஆண்டு வருமானம் ரூ. 1,00,000/-க்கும் குறைவாக இருக்க வேண்டும்.

மாநில, மத்திய அரசுகளின் கல்வி உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கும் மாணவர்கள் ( ஆதிதிராவிட, பழங்குடி, மதம் மாறிய ஆதிதிராவிடர் ) முந்தைய ஆண்டில் வேலை நாட்களில் 75% அல்லது அதற்கு மேலாக வருகை தந்து இருக்கவேண்டும்.



### 3. ஆதி திராவிடர்களுக்கான மானிய, கல்வி உதவித்தொகை

கல்லூரி விடுதியில் தங்கிப்படிக்கும் ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் சமுதாய (கிறித்துவ மதம் மாறியவர்கள் உட்பட) மாணவர்கள் இந்த மானிய கல்வி உதவித் தொகைக்கு தகுதியானவர்கள் ஆவார்கள். பெற்றோர்கள் ஆண்டு வருமானம் ரூ. 1,00,000/-க்குள் இருக்க வேண்டும்.

### 4. சுதந்திரப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை

இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு மூன்று மாதம் சிறை சென்றவர்களின் குழந்தைகள் இந்தக் கல்வி உதவித் தொகையைப் பெறத் தகுதி உள்ளவர்கள் ஆவார்கள். இதைத் தவிர கல்லூரி, தொழிற்பயிற்சிக் கல்விக்கான கட்டணச் சலுகைக்கும் தகுதியாவார்கள்.

### 5. முன்னாள்இராணுவத்தினர் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை

இராணுவத்தில் பணிபுரிகின்றவர்களைச் சார்ந்தவர்களின் குழந்தைகளுக்காகவும், முன்னாள் இராணுவத்தினரின் குழந்தைகளுக்காகவும் இந்தக் கல்வி உதவித்தொகை வழங்கப்படும். கட்டணச் சலுகை விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டவை.

## IX. தேர்வு நெறியாளர் அலுவலகம்

(Office of the Controller of Examinations)

1. பருவத் தேர்வு விண்ணப்பங்களைத் தேர்வு நெறியாளர் அலுவலகத்தினர், துறைத்தலைவர்கள் மூலமாக மாணவர்களுக்கு அளித்திடுவர்.
2. விண்ணப்பத்தில் மாணவரின் பெயர், தேர்வு எண் மற்ற விவரங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. உரிய காலத்திற்குள் கல்லூரி அலுவலகத்தில் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.
4. பணம் செலுத்தியதற்கான படிவத்தைப் பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் இணைத்துத் துறைத்தலைவரின் கையொப்பம் பெற்றுத் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் கொடுக்க வேண்டும்.
5. விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது தேர்வு எழுத வேண்டிய பாடங்களைச் சரியாகக் குறிப்பிட வேண்டும்.
6. தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.

### தேர்வு நுழைவுச் சீட்டு

1. தேர்வு தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன் தேர்வு நுழைவுச்சீட்டுகள் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் வழங்கப்படும்.
2. மாணவர்கள் தங்களுடைய தேர்வு நுழைவுச் சீட்டையும் அடையாள அட்டையையும் தேர்வுக்குத் தவறாமல் கொண்டு வரவேண்டும்.
3. தேர்வு நுழைவுச்சீட்டின்றி தேர்வுக்கு வரும் மாணவர்கள் தேர்வு நெறியாளர் / தலைமைத் தேர்வு கண்காணிப்பாளரின் சிறப்பு அனுமதி பெற்ற பின்னரே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். அவர்களுக்கு ஒறுத்தல் கட்டணம் விதிக்கப்படும்.
4. தேர்வு நுழைவுச் சீட்டைத் தவறவிட்டவர்கள் ரூ.100 கட்டணம் செலுத்தி நகல் நுழைவுச்சீட்டு பெற்றுக் கொள்ளலாம்.



### மதிப்பெண் விபரங்கள்

### UG, PG and M.Phil., Courses

| | | Maximum | | Minimum | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | அக மதிப்பீடு | புற மதிப்பீடு | அக மதிப்பீடு | புற மதிப்பீடு | |
| செய்முறைத் தேர்வுகள் | UG | 25 | 75 | 10 | 30 | 40 |
| | PG | 40 | 60 | 16 | 24 | 50* |
| எழுத்துத் தேர்வுகள் | UG | 25 | 75 | 10 | 30 | 40 |
| | PG / M.Phil., | 40 | 60 | 16 | 24 | 50* |

** Passing minimum Aggregate for PG and M.Phil., Courses (Internal + External) should be 50 marks*

**அகமதிப்பீடு** **மதிப்பெண்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | இள நிலை | அக மதிப்பீட்டுத் தேர்வு<br>பயிற்சிக் கட்டுரை<br>திருப்புத்தேர்வு | 10<br>5<br>10 |
| | | | 25 |
| 2. | முது நிலை மற்றும் எம்ஃபில் | அக மதிப்பீட்டுத் தேர்வு<br>பயிற்சிக்கட்டுரை / Seminar<br>திருப்புத்தேர்வு | 20<br>10<br>10 |
| | | | 40 |

### தேர்வு முடிவுகள் (Tentatively)

1. தேர்வு முடிவுகள் கல்லூரிக் கையேட்டில் அறிவிக்கப்பட்ட தேதிகளில் கல்லூரி இணையதளத்திலும், கல்லூரி அறிக்கைப் பலகையிலும் வெளியிடப்படும். தேர்வு முடிவுகள் அலைபேசி குறுந்தகவல் மூலமாகவும் அனுப்பி வைக்கப்படும்.
2. தேர்வு முடிவுகள் வெளியிடும் தேதி தொடர்பாகத் தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு தொலைபேசி மூலம் வரும் விசாரணைகள் ஏற்கப்படமாட்டாது.
3. அகமதிப்பீட்டில் தேர்ச்சி பெறாத அல்லது அகமதிப்பீட்டில் மதிப்பெண்மேம்பாடு பெற விரும்பும் மாணவர்கள் அடுத்துவரும் பருவத்தில் ரூபாய் 100/- கட்டணம் செலுத்தி மறுபடியும் அகமதிப்பீட்டுத் தேர்வு, பயிற்சிக் கட்டுரை, திருப்புத்தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெறுவது அவசியமாகும். மேலும், தேர்வு முடிவுகள் வெளியான 10 நாட்களுக்குள் அதற்கான விண்ணப்பத்தைத் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் பெற்று துறை ஆசிரியர், துறைத்தலைவர், கல்லூரி முதல்வர் ஆகியோரின் கையொப்பத்துடன் கல்லூரி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

### துணைத் தேர்வுகள்

துணைத் தேர்வுகள் ஆகஸ்ட் / பிப்ரவரி மாதங்களில் நடைபெறும்.

கல்லூரிக் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைப்படி துணைத் தேர்வுகள் நடத்தப்பெற்று தேர்வு முடிவுகள் வெளியிடப்படும்.

### தேர்வுக் கட்டணம் செலுத்துதல்

**தனித்தேர்வர்கள்** ( Private Candidates)

நவம்பர் மற்றும் ஏப்ரல் மாதத் தேர்வுகளுக்குப் பதிவு செய்தல் பற்றிய விபரங்கள் தனித் தேர்வர்களுக்காக இணையதளத்தில் வெளியிடப்படும். இருப்பினும் ஒவ்வொரு ஆண்டும் கீழ்க்கண்ட தேதிகளில் தனித்தேர்வர்கள்,

தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பம் பெற்று உரிய கட்டணத்தை கல்லூரி அலுவலகத்தில் செலுத்தித் தேர்வுக்குப் பதிவு செய்துக் கொள்ளலாம்.

| பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் எம்.ஃபில் | |
|---|---|
| நவம்பர் / டிசம்பர் தேர்வுகள் | செப்டம்பர் 01 முதல் 30 வரை |
| ஏப்ரல் / மே தேர்வுகள் | பிப்ரவரி 01 முதல் 28 வரை |

**தேர்வு அறை விதிமுறைகள்**

தேர்வு எழுத வரும் மாணவர் தேர்வறை அனுமதிச்சீட்டு (Hall Ticket) அடையாள அட்டை (Identity Card) ஆகியவற்றைக் கண்டிப்பாகக் கொண்டு வர வேண்டும். அடையாள அட்டையும், தேர்வறை அனுமதிச் சீட்டும் இவை இரண்டுமோ அல்லது இரண்டில் ஏதேனும் ஒன்றோ கொண்டு வராத மாணவர்கள் தேர்வு எழுதக் கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டார்கள். இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தவறவிட்ட மாணவர்கள் முதல்வரைச் சந்தித்து தகுந்த காரணம் தெரிவித்து தற்காலிக அடையாளக் கடிதமும், தேர்வறை அனுமதிச்சீட்டும் பெற்றபின் அந்தக் குறிப்பிட்ட தேர்வுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவர். நிரந்தரமான அடையாள அட்டையும் தேர்வறை அனுமதிச்சீட்டும் பெற்றபின்னரே அடுத்த தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். மாணவர்கள் கூறும் காரணங்கள் முதல்வருக்கு திருப்தி அளித்தால் மட்டுமே மேற்கண்ட அடையாளக் கடிதமும் தேர்வறை அனுமதிச்சீட்டும் மாணவர்களுக்கு வழங்கப்படும். தேர்வு அறைகளில் கணித அளவைப் பட்டியல் தவிர புத்தகம் போன்ற பொருட்கள் அனுமதிக்கப்படமாட்டாது. கூடுதல் விடைத்தாள்கள் தேவைப்பட்டால் மாணவர்கள் இருக்கையிலிருந்து எழுந்து நின்று மேற்பார்வையாளரின் கவனத்தை ஈர்க்க வேண்டும். தேர்வு நடைபெறும் பொழுது மாணவர்கள் எழுதுகோல் முதலான துணைக்கருவிகள் எதுவும் இரவல் வாங்க, கொடுக்க அனுமதிக்கப் படமாட்டாது. தேர்வு அறைக்குள் புத்தகத்தையோ அல்லது அதன் பகுதியையோ தன் வசம் வைத்திருத்தல், கையால் எழுதப்பெற்ற காகிதம் அல்லது உருமாற்றி அமைக்கப்பட்ட தாள் வைத்திருத்தல், மற்ற மாணவர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்தல், பிற மாணவர்களின் விடைத்தாள்களைப் பார்த்து எழுதுதல், வினாத்தாள்களில் விடைக் குறிப்புகளை எழுதுதல், தேர்வு அறைக்கு வெளியே தொடர்பு கொள்ளுதல் போன்ற அனைத்துச் செயல்களும் தேர்வு நெறிமுறைகளுக்கு எதிராகக் கருதப்படும். தேர்வு நெறிகளை மீறும் மாணவர்கள் உடனே அறையை விட்டு வெளியேற்றப் படுவார்கள். இது தொடர்பான விரிவான அறிக்கையும், குற்றம் கண்டு பிடிக்கப்பட்ட மாணவரின் விடைத்தாள்



மற்றும் ஆதாரப் பொருட்கள் அடங்கிய தொகுப்பும் உடனடியாகக் கல்லூரி முதல்வருக்கு அனுப்பப்படும். குற்றம் செய்த மாணவர்கள் தொடர்ந்து வரும் தேர்வுகளை எழுத அனுமதிக்கப் படமாட்டார்கள்.

**நிலைச் சான்றிதழ்கள்**

ஏப்ரல் மாதத் தேர்வு முடிவுகள் வெளியான பின் ஒவ்வொரு துறைக்கும் U.G. மற்றும் P.G. யில் முதல் மூன்று இடங்கள் பெற்ற மாணவர்கள் பட்டியல் அனுப்பப்படும். அப்பட்டியலின்படி தகுதியுள்ள மாணவர்கள் Certificate--க்கு தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

## X. மாணவர்களுக்கான விடுதிகள்

**ஆடவர் விடுதிகள் :-**

கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் தங்கி பயில்வதற்காக மகாத்மா காந்தி நூற்றாண்டு விடுதி (M.G.C. Hostel) மற்றும் மேட்டுநில விடுதி (Highland Hostel) ஆகிய இரண்டு விடுதிகள் உள்ளன. இந்த இரண்டு விடுதிகளிலும் 500 மாணவர்கள் தங்கிப் பயிலலாம். மாணவர்களுக்கு உள்ளரங்க விளையாட்டு மற்றும் தொலைக்காட்சி வசதிகள் உள்ளன.

**மகளிர் விடுதிகள்**

**CVR Hostel** மற்றும் **U.G.C. Hostel** என்ற பெயரில் **1600** மாணவிகள் தங்கும் வசதியுடன் விடுதிகள் இயங்கி வருகின்றன. மாணவிகளுக்கு உள்ளரங்க விளையாட்டு மற்றும் தொலைக்காட்சி, படிப்பகம், இண்டர்நெட் முதலிய வசதிகள் உள்ளன.

## XI. மாணவர்களுக்கான பிற அமைப்புகள்

**1. தேசிய மாணவர் படை ( இராணுவம் )**

ஒரு அதிகாரி மற்றும் 90 மாணவர்களைக் கொண்ட தரைப்படைப் பிரிவு நமது கல்லூரியில் 1952ம் ஆண்டு தொடங்கப்பட்ட 2 (தமிழ்நாடு) பேரணி என்.சி.சி.யின் கீழ் இயங்கி வருகிறது.

**2. நாட்டு நலப்பணித் திட்டம் ( NSS )**

நம் கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்டம் ( NSS ) செயல்பட்டு வருகிறது. இதில் நான்கு அணிகள் உள்ளன. ஒவ்வொராண்டும் இத்திட்டத்தில் 500 மாணவத் தொண்டர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**3. ரோட்டராக்ட் சங்கம் ( Rotaract Club )**

மாணவர்களிடையே தலைமைப்பண்பு, சேவை மனப்பான்மை, நன்னடத்தை ஆகியவற்றை வளர்ப்பதை

நோக்கமாகக் கொண்ட இச்சங்கம் கல்லூரியிலும் கல்லூரிக்கு வெளியிலும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகிறது. ஆண்டு தோறும் 100 மாணவர்கள் சங்க உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

### 4. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்

செஞ்சிலுவைச் சங்கம், மனிதாபிமானம், பாரபட்சமின்மை, நடுநிலைமை , தனித்துவம், தன்னலமற்ற சேவை, ஒருமைப்பாடு, உலகளாவிய தன்மை ஆகிய கொள்ளைகளைக் கொண்டது. இளம் நெஞ்சங்களில் சேவை உணர்வினை வளர்த்து எதிர்காலத்தில் சிறந்த குடிமக்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கல்லூரிகளில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்க அமைப்புகள் தொடங்கப்பட்டு, நலவாழ்வு, நோய்த்தடுப்பு, துயர் துடைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் செயல் திட்டங்களைக் கொண்டு இயங்குகிறது. ஆண்டுதோறும் 100 மாணவர்கள் சங்க உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

## XII. தர உத்திரவாத உள்ளமைப்பு (IQAC)

தேசிய தர ஆய்வு மற்றும் அங்கீகாரக்குழு அறிவுறுத்தலின்படி இத்தர உத்தரவாதக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. உயர்கல்வி, கல்வி சார்ந்த ஆளுமை மற்றும் சேவைப்பணிகள், மாணவர் எதிர்கால நலன் குறித்த ஆலோசனை, ஆசிரியர் - மாணவர் திறன் மதிப்பிடுதல், கல்லூரி வளாக மேம்பாடு, சமூக விழிப்புணர்வு, கல்வி தொழில் நிறுவனங்கள் ஒப்பந்தம் மூலம் அனுபவக்கல்வி வாய்ப்பு ஆகிய பல அம்சங்களை உள்ளடக்கிய ஓர் அமைப்பாகும்.

### பிற வசதிகள்

கல்லூரி வளாகத்தில் சிண்டிகேட் வங்கி ATM மற்றும் சிற்றுண்டிச் சாலையும் உள்ளன.



## XIII. OFFICE OF THE CONTROLLER OF EXAMINATIONS

### Tentative Dates for Supplementary Examinations of UG and PG Programmes

| | EVEN SEMESTER August 2017 | ODD SEMESTER February 2018 |
|---|---|---|
| Payment of Examination fees and Submission of application forms for supplementary examinations | July 2017 | January 2018 |
| Commencement of supplementary examinations | August 2017 | February 2018 |
| Publication of Results | September 2017 | March 2018 |

** The schedule for supplementary examinations will be published in the college / Controller of Examinations Notice Board and can be seen in the college website as well (www.nmc.ac.in)*

### Tentative Dates for Semester Examinations of UG and PG Programmes

| | ODD SEMESTER November 2017 | EVEN SEMESTER April 2018 |
|---|---|---|
| Commencement of registration for examination | 30-08-2017 | 07-02-2018 |
| Last date for payment of examination fees and submission of application forms ( without fine ) | 15-09-2017 | 21-02-2018 |
| with fine | 28-09-2017 | 08-03-2018 |
| Commencement of practical examinations | 03-11-2017 | 29-03-2018 |
| Commencement of theory examinations | 04-11-2017 | 11-04-2018 |
| Publication of results | 15-12-2017 | 25-05-2018 |
| Last date for payment of fees for getting photocopy of the answer script | 22-12-2017 | 09-06-2018 |
| Last date for payment of fees for revaluation | 28-12-2017 | 18-06-2018 |
| Date of publication of revaluation results | 10.01-2017 | 20-06-2018 |
| Instant Examination* | - | June 2018 |

** The schedule for instant examination will be published in the College / COE Notice Board and can be seen in the website as well (www.nmc.ac.in)*

## XIV. MALPRACTICES AND PUNISHMENTS

| Sl. No. | NATURE OF MALPRACTICE | Sl. No. | PUNISHMENT |
|---|---|---|---|
| 1. | Possession of Material relevant to the Examination | 1. | Cancelling of all the written exams of that session. |
| 2. | Copying from neighbouring students or from materials possessed or exchange of answer sheet confessed at the centre and at the enquiry. | 2. | Cancellation of all the written exams and debarred for one / two more session(s). |
| 3. | No confession at the centre but confession at the enquiry or vice versa. | 3. | Present examination cancelled. Debarred from writing next two exams. Rusticated for two semesters or one academic year. |
| 4. | No confession at the centre or at the enquiry. | 4. | Present examination cancelled. Debarred from writing next three exams. Rusticated for two semesters or one academic year. |
| 5. | Impertinent & Impolite behaviour towards the invigilator, supt or anyone connected with the exam. | 5. | Present exam cancelled. Debarred from writing next four exams. Rustication for two semesters or one academic year. |
| 6. | Assault on the invigilator or anyone connected. | 6. | Cancellation of the exams taken and debarred for next three years. |
| 7. | Answer sheets written outside the exam hall and inserted in the exam hall or outside the hall and reported by the examiner. | 7. | Cancellation of the whole exams taken and debarred for the next two / three years. |
| 8. | Refusing to handover the answer sheet while being found copying or running away from the hall with answer sheet or destroying the answer paper or any evidence while being caught. | 8. | Cancellation of the whole exams taken for that semester ( for taking away the answer script ). |



## MALPRACTICES AND PUNISHMENTS

| Sl. No. | NATURE OF MALPRACTICE | Sl. No. | PUNISHMENT |
|---|---|---|---|
| 9. | Impersonation. | 9. | Present exam cancelled. Debarred from writing the next five exams. Rusticated for six semesters or three academic years. Impersonator if happens to be a current student, the same punishment is to be awarded. Impersonation involving outsider, it has to be reported to the police for action and to inform the college where he / she is studying now. |
| 10. | Indicating identity, using colour thread / marking in colour pencil / candidates name / Reg. No. in other pages / college name / any other special marking. | 10. | Cancellation of examination of that particular course. |
| 11. | Attempt to bribe the examiner by post or otherwise. Letter of appeal with promise for consideration of any form / offering cash or kind / remittance of cash to the college for a favour. | 11. | Cancellation of the examination in that particular course / cancellation of that whole examination taken in that semester and debarred from the next two subsequent semester examinations. |
| 12. | Wilfully changing register number | 12. | Cancellation of all the examinations taken in that semester. |
| 13. | Tampering with Hall tickets / certificates etc. | 13. | Candidates will not be permitted to appear for any examination of this college for a period of two years from the date of production of documents. |
| 14. | Any reported malpractice in internal / continuous assessment exams. | 14. | Cancellation of the present series and debarred to write the course summative examination of that semester. |
| 15. | Malpractice in any plagiarism in assignment and project work and dissertation. | 15. | If found true, zero mark to be awarded. |

## NMC - SF — June 2017

| Sunday | Monday | Tuesday | Wednesday | Thursday | Friday | Saturday |
|---|---|---|---|---|---|---|
| **HOLIDAY** | | | | 1 | 2 | 3 ***Holiday*** |
| 4 **HOLIDAY** | 5 World Environment Day | 6 | 7 | 8 | 9 | 10 ***Holiday*** |
| 11 **HOLIDAY** | 12 | 13 | 14 College reopens after summer vacation | 15 | 16 | 17 ***Holiday*** |
| 18 Fathers Day **HOLIDAY** | 19 | 20 | 21 | 22 | 23 | 24 ***Holiday*** |
| 25 **HOLIDAY** | 26 Ramzan Holiday World Anti drugs Day | 27 | 28 | 29 | 30 Last date to pay Semester fees without fine | |

Govt.Holidays : 26 : RAMZAN

No.of working days - 12



## NMC - SF — July 2017

| Sunday | Monday | Tuesday | Wednesday | Thursday | Friday | Saturday |
|---|---|---|---|---|---|---|
| 30 **HOLIDAY** | 31 Last date to pay Semester fees with fine | | | | | 1 ***Holiday*** |
| 2 **HOLIDAY** | 3 | 4 | 5 | 6 | 7 | 8 ***Holiday*** |
| 9 **HOLIDAY** | 10 | 11 World Population Day | 12 | 13 | 14 | 15 ***Holiday*** |
| 16 **HOLIDAY** | 17 | 18 | 19 Last date for Submission of Assignment I | 20 | 21 | 22 ***Holiday*** |
| 23 **HOLIDAY** | 24 CIA Test I | 25 CIA Test I | 26 CIA Test I | 27 CIA Test I | 28 CIA Test I | 29 ***Holiday*** |

Govt.Holidays : - Nil -

Cum. working days - 33

## NMC - SF — August 2017

| Sunday | Monday | Tuesday | Wednesday | Thursday | Friday | Saturday |
|---|---|---|---|---|---|---|
| **HOLIDAY** | | 1 | 2 | 3 ***Adi 18*** **Holiday** | 4 **Holiday** | 5 ***Holiday*** |
| 6 **Heroshima Day** **HOLIDAY** | 7 | 8 | 9 **Nagasaki day** | 10 | 11 | 12 ***Working day*** |
| 13 **HOLIDAY** | 14 **Gokulastami** **Holiday** | 15 **Independence day** **Holiday** | 16 | 17 | 18 | 19 ***Working day*** |
| 20 **HOLIDAY** | 21 | 22 | 23 Last date for Submission of Assignment II | 24 | 25 **Vinayagar Chathurthi** **Holiday** | 26 ***Holiday*** |
| 27 **HOLIDAY** | 28 CIA Test II | 29 CIA Test II | 30 CIA Test II | 31 CIA Test II | | |

**Govt.Holidays :** 14 : GOKULASTAMI; 15 : INDEPENDENCE DAY; 25 : VINAYAGAR CHATHURTHI

3 & 4 - ADI PATHINETTU

Cum. working days - 53



## NMC - SF — September 2017

| Sunday | Monday | Tuesday | Wednesday | Thursday | Friday | Saturday |
|---|---|---|---|---|---|---|
| **HOLIDAY** | | | | | 1 CIA Test II | 2 ***Bakrith Holiday*** |
| 3 **HOLIDAY** | 4 | 5 Teachers Day | 6 | 7 | 8 World Literary day | 9 ***Holiday*** |
| 10 **HOLIDAY** | 11 | 12 | 13 | 14 | 15 | 16 World Ozone Day ***Holiday*** |
| 17 **HOLIDAY** | 18 | 19 | 20 Last date for Submission of Assignment III | 21 CIA Test III | 22 CIA Test III | 23 ***Working day*** CIA Test III |
| 24 **HOLIDAY** | 25 CIA Test III | 26 CIA Test III | 27 World Tourism Day | 28 | 29 Saraswathi Pooja Holiday | 30 ***Vijayadasami Holiday*** |

**Govt.Holidays :** 02 : BAKRITH; 29 : SARASWATHI POOJA; 30 : VIJAYADASAMI

Cum. working days - 74

## NMC - SF

## October 2017

| Sunday | Monday | Tuesday | Wednesday | Thursday | Friday | Saturday |
|---|---|---|---|---|---|---|
| 1 Moharam **HOLIDAY** | 2 Gandhi Jayanthi **Holiday** | 3 World Wild Animals day | 4 World Animal welfare day | 5 World Naturist day | 6 | 7 ***Holiday*** |
| 8 **HOLIDAY** | 9 World Postal day | 10 | 11 | 12 | 13 | 14 ***Working day*** |
| 15 **HOLIDAY** | 16 World Food day **Holiday** | 17 **Holiday** | 18 Diwali **Holiday** | 19 **Holiday** | 20 Rehearsal Exam | 21 Rehearsal Exam |
| 22 **HOLIDAY** | 23 Rehearsal Exam | 24 United Nations Day Rehearsal Exam | 25 Rehearsal Exam | 26 | 27 | 28 ***Holiday*** |
| 29 **HOLIDAY** | 30 Last Working Day | 31 | | | | |

**Govt.Holidays :** 01 : MOHARAM
02 : GANDHI JAYANTHI
18 : DIWALI

Cum. working days - 92



## NMC - SF

## November 2017

| Sunday | Monday | Tuesday | Wednesday | Thursday | Friday | Saturday |
|---|---|---|---|---|---|---|
| **HOLIDAY** | | | 1 | 2 | 3 Commencement of I / III / V Semester Examinations | 4 ***Holiday*** |
| 5 **HOLIDAY** | 6 | 7 | 8 | 9 | 10 | 11 ***Holiday*** |
| 12 **HOLIDAY** | 13 | 14 Children's day | 15 | 16 | 17 | 18 ***Holiday*** |
| 19 **HOLIDAY** | 20 | 21 | 22 College Reopens for Even Semester | 23 | 24 | 25 ***Holiday*** |
| 26 **HOLIDAY** | 27 | 28 | 29 | 30 National Flag day | | |

Cum. working days - 98

NMC - SF

## December 2017

| Sunday | Monday | Tuesday | Wednesday | Thursday | Friday | Saturday |
|---|---|---|---|---|---|---|
| 31 ***HOLIDAY*** | | | | | 1 AIDS day | 2 ***Miladi Nabi Holiday*** |
| 3 ***HOLIDAY*** | 4 | 5 | 6 | 7 | 8 **Last day to pay semester fees without fine** | 9 ***Holiday*** |
| 10 ***HOLIDAY*** | 11 | 12 | 13 | 14 | 15 | 16 ***Holiday*** |
| 17 ***HOLIDAY*** | 18 | 19 | 20 Last date for Submission of Assignment I | 21 | 22 | 23 ***Holiday*** |
| 24 ***HOLIDAY*** | 25 Christmas day **Holiday** | 26 | 27 | 28 | 29 Vaigunda Yegadasi day **Holiday** | 30 ***Holiday*** |

**Govt.Holidays :** 02 : MILADI NABI 25 : CHRISTMAS
29 : VAIGUNDA YEGADASI

Cum. working days - 26



NMC - SF

## January 2018

| Sunday | Monday | Tuesday | Wednesday | Thursday | Friday | Saturday |
|---|---|---|---|---|---|---|
| ***HOLIDAY*** | 1 NEW YEAR **Holiday** | 2 | 3 | 4 | 5 College Founders day | 6 ***Working day*** |
| 7 ***HOLIDAY*** | 8 **Last day to pay semester fees with fine** CIA Test I | 9 CIA Test I | 10 CIA Test I | 11 CIA Test I | 12 CIA Test I | 13 ***Bogi Holiday*** |
| 14 Thai Pongal ***HOLIDAY*** | 15 Mattu Pongal **Holiday** | 16 Uzhavar day **Holiday** | 17 **Holiday** | 18 | 19 | 20 ***Working day*** |
| 21 ***HOLIDAY*** | 22 | 23 | 24 | 25 | 26 Republic day **Holiday** | 27 ***Working day*** |
| 28 ***HOLIDAY*** | 29 | 30 **Martyrs' day** World Leprosy Eradication day | 31 | | | |

**Govt.Holidays :** 13 : BOGI 15 : MATTU PONGAL
14 : THAI PONGAL 16 : UZHAVAR DAY
26 : REPUBLIC DAY

Cum. working days - 47

## NMC - SF — February 2018

| Sunday | Monday | Tuesday | Wednesday | Thursday | Friday | Saturday |
|---|---|---|---|---|---|---|
| HOLIDAY | | | | 1 | 2 | 3 ***Holiday*** |
| 4 HOLIDAY | 5 CIA Test II | 6 CIA Test II | 7 CIA Test II | 8 CIA Test II | 9 CIA Test II | 10 ***Holiday*** |
| 11 HOLIDAY | 12 | **Holiday** 13 Mahasivarathiri | 14 | 15 | 16 | 17 ***Working day*** |
| 18 HOLIDAY | 19 | 20 | 21 | 22 | 23 | 24 ***Holiday*** |
| 25 World Tuber Culosis day HOLIDAY | 26 | 27 | 28 National Science day | | | |

**Govt.Holidays :** 13 : MAHA SIVARATHIRI

Cum. working days - 67



## NMC - SF — March 2018

| Sunday | Monday | Tuesday | Wednesday | Thursday | Friday | Saturday |
|---|---|---|---|---|---|---|
| HOLIDAY | | | | 1 | 2 Last date for Assignment III | 3 ***Holiday*** |
| 4 HOLIDAY | 5 CIA Test III | 6 CIA Test III | 7 CIA Test III | 8 International Women's day CIA Test III | 9 CIA Test III | 10 ***Holiday*** |
| 11 HOLIDAY | 12 | 13 | 14 | 15 World Consumer Right day | 16 | 17 ***Holiday*** |
| 18 Telugu New year HOLIDAY | 19 | 20 | 21 World Forestry day | 22 World Water day Rehearsal Exam | 23 Rehearsal Exam | 24 ***Working day*** Rehearsal Exam |
| 25 HOLIDAY | 26 Rehearsal Exam | 27 Rehearsal Exam | 28 Rehearsal Exam | 29 | 30 Good Friday **Holiday** | 31 Last working day for Even Semester |

**Govt.Holidays :** 18 : TELUGU NEW YEAR

Cum. working days - 90

## April 2018

| NMC - SF | Monday | Tuesday | Wednesday | Thursday | Friday | Saturday |
|---|---|---|---|---|---|---|
| 1 **HOLIDAY** | 2 Commencement of Autonomous Practical Examinations | 3 | 4 | 5 World Ocean Day | 6 | 7 |
| 8 **HOLIDAY** | 9 | 10 | 11 Commencement of Theory Examination | 12 | 13 | 14 Tamil New Year **Holiday** |
| 15 **HOLIDAY** | 16 | 17 Samayapuram Mariyamman Car Festival Holiday | 18 World Heritage Day | 19 | 20 Holiday | 21 |
| 22 World Earth Day **HOLIDAY** | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 **HOLIDAY** | 30 | | | | | |

**Govt.Holidays :** 14 : TAMIL NEW YEAR




| HOUR / DAY | I | II | III | IV | V |
|---|---|---|---|---|---|
| I | | | | | |
| II | | | | | |
| III | | | | | |
| IV | | | | | |
| V | | | | | |
| VI | | | | | |

| HOUR / DAY | I | II | III | IV | V |
|---|---|---|---|---|---|
| I | | | | | |
| II | | | | | |
| III | | | | | |
| IV | | | | | |
| V | | | | | |
| VI | | | | | |



குறிப்புகள்


Library


Founder's Memorial


Sir C.V. Raman Hostel for Women